நோயை நீக்க கிராமப் புறங்களில் கண் நோய் மருத்துவ மனைகள் கட்டும் திட்டம் பரிசிலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எதெது அரசாங்கத்தால் முடியுமோ அதைத்தான் அரசாங்கம் செய்ய முயற்சிக்க முடியும். கிராமப்புறங்கள் என்று சொன்னால் பல ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. எனவே இடையிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளிலும், தலைமை மருத்துவ மனைகளிலும், எங்கேயாவது இந்த நோய் பரவியிருக்குமானால் அந்தப் பகுதிகளுக்கு சிகிச்சை அளிக்கத்தான் அரசாங்கம் உறுதுணையாகச் செயல்பட முடியும்.

* 480. **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் 1971-ம் ஆண்டு, மே மாதம் திடீரெனப் பரவிய கண் நோய்க்கு எத்தனை பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சென்னை நகரில் 1971-ஆம் ஆண்டு மே மாதம் திடீரெனப் பரவிய கண் நோய்க்கு மொத்தம் 10,974 பேருக்கு சென்னை அரசாங்கக் கண் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா :** இந்தக் கண் நோய்க்கு சித்த மருத்துவத்தில் சிறந்த மருந்துகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அத்தகைய சித்த மருந்துகளைப் பயன்படுத்துவதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சித்த வைத்தியத்தில் சிறந்த மருந்துகள் இருக்கின்றன. இந்தக் கண் நோய்க்கு சித்த வைத்தியத்தில் மருந்து இருக்கிறது என்று இதுவரை தெரிவிக்கவில்லை. அப்படித் தெரிவிக்கப்படுமானால் பயன்படுத்த வழிவகை செய்யப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இப்போது சென்னையில் மட்டும் பரவலாக அதிகமாக வைத்தியம் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் கிராமப்புறங்களில் இது அதிகமாகப் பரவி, அதிகமாக மக்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆகவே, இது போன்ற அவசர நேரங்களில் மொபைல் மருத்துவ மனை போன்றவற்றை வைத்து, நல்ல கண் எக்ஸ்பர்ட்டுகளை அதிலே அனுப்பி, கிராமப்புறத்தில் பரவி வரும் இந்தத் திட்டத்தை இப்படிப்பட்ட நேரங்களில் செய்ய அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு கிடைத்த விவரப்படி சென்னையில் அதிகமான எண்ணுடையவர்கள் பாதிக்கப்பட்டனர். மற்ற இடங்களில், மாவட்ட தலைநகரில் இருக்கக்கூடியவர்கள், அந்தந்த மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டார்கள்.